ரொறன்ரோவில் வெளியேற்றப்படலைத் தடுத்தல்

வாடகைக் குடியிருப்பாளர்-களுக்கான

இற்றைப்படுத்தப்பட்டது: மே 2024

toronto.ca/EvictionHelp

TORONTO

நன்றிக்குரியவர்கள்

நகரின் வாடகைக்குடியிருப்பாளர்களுக்கான ஆலோசனைக் குழு (TAC), ஒன்ராறியோவின் வாடகைக்குடியிருப்பாளர்களுக்கான பரிந்துரைப்பு மையம் (ACTO), குடியிருப்பு உரிமைகளுக்கான கனடாவின் மையம் (CCHR), யோர்க் பல்கலைக்கழகத்தின் Osgoode Hall Law School, University Health Network Gattuso Centre for Social Medicine ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்ளடங்கலாக, இந்தக் கையேட்டை வடிவமைக்க உதவிய பலருக்கும் - உங்களின் தொடர்ச்சியான பின்னூட்டம் மற்றும் ஈடுபாட்டுக்கு நாங்கள் நன்றி கூறுகிறோம்.

எல்லாவற்றிற்கும் மேலாக, வெளியேற்றப்படலை எதிர்கொள்ளும் ஏனைய ரொறன்ரோ வாடகைக்குடியிருப்பாளர்களுக்கு முடிந்தவரையில் இந்த கையேட்டை பயனுள்ளதாக்க உதவுவதற்காக தங்களின் கதைகளையும் யோசனைகளையும் தாராளமாகப் பகிர்ந்து கொண்ட வாடகைக்குடியிருப்பாளர்களுக்கு நகர் தனது நன்றியைத் தெரிவிக்கிறது. உங்களின் பங்கேற்பிற்கு நாங்கள் மிகவும் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

பொறுப்புத்துறப்பு

இந்த ஆவணத்தில் உள்ள தகவல்கள் பொதுவான தகவல்களை வழங்கும் நோக்கத்தை மட்டுமே கொண்டுள்ளன, இவை சட்டரீதியான ஆலோசனைகளையோ அல்லது பிற நிபுணத்துவ ஆலோசனைகளையோ அல்லது ஏதாவது அபிப்பிராயங்களையோ கொண்டிருக்கவில்லை. தங்களின் குறிப்பிட்ட சட்டரீதியான சிக்கல்களைப் பற்றிக் கலந்துரையாடுவதற்குத் தனிநபர்கள் ஒரு வழக்கறிஞரை, ஒரு சட்ட உதவியாளரை அல்லது சட்டரீதியான மையம் ஒன்றைத் தொடர்பு கொள்ள வேண்டும். இந்த ஆவணத்தில் சேர்க்கப்பட்டுள்ள தகவல்கள், அதன் முதல் வெளியீட்டுத் திகதிக்கேற்றவையாக உள்ளன, ஆனால், சட்டத்தில் மாற்றங்கள் ஏற்படக்கூடும் என்பதால், எப்போதும் இவற்றில் தங்கியிருக்க முடியாது. இந்தக் கையேட்டில் அல்லது நகரின் வலைத்தளத்தில் உள்ள ஏதாவது உள்ளடக்கத்தைப் பயன்படுத்துவதால் அல்லது நம்புவதால் உங்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளுக்கு ரொறன்ரோ நகர் பொறுப்பேற்க மாட்டாது.

மின்னணுரீதியான அன்பளிப்பு அட்டை (e-gift card) ஒன்றை வெல்லுங்கள்

உங்களின் கருத்துக்களை அறிவதற்கு நாங்கள் விரும்புகிறோம்! இந்தக் கையேட்டைப் பற்றிய பின்னூட்டத்தை எங்களுக்குத் தெரிவியுங்கள், உங்களின் பெயர் மின்னணுரீதியான அன்பளிப்பு அட்டை ஒன்றை வெல்வதற்கான அதிஷ்டலாபச் சீட்டில் சேர்க்கப்படும். 2024 முழுவதும் ஆறு (6) மின்னணுரீதியான அன்பளிப்பு அட்டைகளை நாங்கள் வழங்குவோம்

பார்வையிடுங்கள்: https://cotsurvey.chkmkt.com/evictions

பொருளடக்கம்

வெளியேற்றப்படலை நீங்கள் எதிர்கொண்டால் 3
- பரிந்துரைக்கப்படும் நடவடிக்கைகள் 3
- தவிர்க்க வேண்டிய செயல்பாடுகள் 3

ஆதரவுகளைப் பெற்றுக்கொள்ளல் 3

வெளியேற்றப்படலைத் தடுத்தல் பற்றிய மேலோட்டம் 4
- வாடகைக்குடியிருப்பாளர் குத்தகைச் சட்டம் (Residential Tenancies Act) மற்றும் குடியிருப்பு உரிமையாளர் மற்றும் குத்தகைதாரர் சபை (Landlord and Tenant Board) 4
- வாடகைக்குடியிருப்பாளர் குத்தகைச் சட்டத்தின் கீழ் யாருக்குப் பாதுகாப்பு உண்டு 4
- வாடகைக்குடியிருப்பாளராக உங்களின் உரிமைகள் 5
- வாடகை அதிகரிப்பு 5
- வெளியேற்றப்படலை எதிர்த்துப் போராடுவதா அல்லது வெளியேறுவதா என்பதைத் தீர்மானித்தல் 6
- வாடகைக்கான ஆதரவுகள் 6
- வெளியேற்றப்படலுக்கான இழப்பீடு 6
- பல (குத்தகைக்காரர் இருக்கும் (Rooming/ அறைகள்) குடியிருப்புகள் 7

ஒன்ராறியோவில் வெளியேற்றல் நடைமுறை 8
- வெளியேற்றலுக்கான படிமுறைகள் 8

பின்னிணைப்பு A: மாதிரிகள் 9
- மாதிரிக் கடிதம்: திருத்தவேலைக்காக அல்லது புனரமைப்புக்காக வெளியேற்றப்படலை முதல் தடவை மறுப்பதற்கான உரிமை 9
- நிலுவைகளைத் திருப்பிச் செலுத்தும் திட்டம் பற்றிய விபரங்கள் (Worksheet) 10

இணைப்பு B: ஆதரவளிக்கும் முகமைகள் 11
- வாடகைக்குடியிருப்பாளரின் உரிமைகளுக்கான உதவி 11
- சட்ட உதவி 11
- நிதி உதவி 12
- குடியிருப்புக்கான உதவி 13
- மன ஆரோக்கியம் மற்றும் சமூக சேவைகளுக்கான உதவி 13

வெளியேற்றப்படலை நீங்கள் எதிர்கொண்டால்

உங்களின் குடியிருப்பு உரிமையாளர் உங்களை வெளியேற்றப் போவதாகக் கூறியிருந்தால், பின்வரும் பரிந்துரைப்புகள் உங்களுக்கு உதவியாக இருக்கக்கூடும்.

பரிந்துரைக்கப்படும் நடவடிக்கைகள்

தகவல்கள், ஆலோசனைகள் மற்றும் ஆதரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு, **வெளியேற்றப்படலைத் தடுக்கும் ஆதரவுச் சேவைகளுடன் முன்கூட்டியே தொடர்புகொள்ளுங்கள்**. மேலதிக விபரங்களுக்கு 11ம் பக்கத்திலுள்ள ஆதரவளிக்கும் முகமைகளைப் பாருங்கள்.

உங்களின் குடியிருப்பு உரிமையாளருடனான அனைத்து தகவல்தொடர்புகளையும் எழுத்துமூலமாகச் செய்யுங்கள். உங்களின் குடியிருப்பு உரிமையாளர் உங்களை அழைத்தால், எழுத்தில் தொடர்பு கொள்ளும்படி அவரிடம் கேளுங்கள். இது சட்டத்துறைப் பணியாளர்கள் உங்களுக்கு ஆதரவளிக்க உதவுவதுடன், விசாரணை ஒன்று நடந்தால் ஆதாரமாகவும் இருக்க முடியும்.

வெளியேற்றப்படல் தொடர்பான விசாரணை ஒன்று உங்களுக்கு இருப்பதாகக் குடியிருப்பு உரிமையாளர் மற்றும் வாடகைக்குடியிருப்பாளர் சபை (LTB) உங்களுக்குத் தெரிவித்தால், **அந்த விசாரணையில் கலந்துகொள்ளுங்கள் -** இது மிகவும் முக்கியமாகும். வெளியேற்றப்படல் தொடர்பான விசாரணைகள் இருக்கும் வாடகைக்குடியிருப்பாளர்களுக்கு Tenant Duty Counsel Program ஊடாகச் சட்டரீதியான ஆதரவு கிடைக்கிறது. மேலும் அறிவதற்கு 416-979-1446 என்ற இலக்கத்தில் Legal Aid Ontarioஐ அழையுங்கள்.

பொருத்தமானால், வாடகைக்குடியிருப்பாளர்களாக இருக்கும் உங்களின் அயலவர்களுடன் உரையாடுங்கள் மற்றும் தகவல்களை ஒழுங்குபடுத்துங்கள். சிலவேளைகளில் குடியிருப்பு உரிமையாளர்கள் ஒரே நேரத்தில் பல வாடகைக்குடியிருப்பாளர்களை வெளியேற்ற முயற்சிக்கிறார்கள். உங்களின் அயலவர்களுடன் தொடர்புகொள்வது ஒருவரையொருவர் ஆதரிக்க உதவும். சில கட்டடங்களிலும் அயல்களிலும் வாடகைக்குடியிருப்பாளர் சங்கங்கள் உள்ளன, அவை வெளியேற்றப்படலை எதிர்கொள்ளும் வாடகைக்குடியிருப்பாளர்களுக்கு உதவுகின்றன. உள்ளூரில் உள்ள வாடகைக்குடியிருப்பாளர்கள் சங்கங்களுடன் உங்களைத் தொடர்புபடுத்துவதற்கு The Federation of Metro Tenants' Association (FMTA)Tenant Hotline, 416- 921-9494 உதவிசெய்யும்.

தவிர்க்க வேண்டிய செயல்பாடுகள்

வாய்மொழியாகவோ, எழுத்துமூலமாகவோ அல்லது வெளியேறச் சொல்லும் அறிவிப்பு மூலமாகவோ உங்களை வெளியேறும்படி உங்களின் குடியிருப்பு உரிமையாளர் கேட்டால், **நீங்கள் வெளியேற வேண்டியதில்லை**. பொதுவாக விசாரணை ஒன்றின் பின்னர், வெளியேறும்படி LTB ஆல் வழங்கப்படும் உத்தரவின் மூலம் மட்டுமே உங்களை வெளியேற்ற முடியும், அதற்குப் பல மாதங்கள் ஆகலாம்.

சட்டரீதியான ஆலோசனையை மற்றும் ஆதரவுகளை நீங்கள் பெற்றுக்கொள்ளும் வரைக்கும் எந்த ஆவணங்களிலும் கையொப்பமிடுவதை அல்லது வெளியேற ஒப்புக்கொள்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். விரைவாக முடிவுகளை எடுக்கும்படி அல்லது ஆவணங்களில் கையொப்பமிடும்படி குடியிருப்பு உரிமையாளர் ஒருவர் அழுத்தம்தந்தால் அந்த அழுத்தத்திற்கு நீங்கள் பணிய வேண்டியதில்லை. கையொப்பமிடுவதற்கு முன்பாக எப்போதும் ஆதரவுச் சேவைகளுடன் பேசுங்கள்

ஆதரவுகளைப் பெற்றுக்-கொள்ளல்

பின்வருவன உள்ளடங்கலான பல்வேறு ஆதரவுகள், வெளியே-ற்றப்படலைத் தடுப்பதற்கும் தங்களின் குடியிருப்பில் தொடர்ந்து இருப்பதற்கும், வாடகைக் குடியிருப்பாளர்-களுக்கு உதவி செய்வதற்காக.

- சட்டரீதியான தகவல்கள் மற்றும் ஆதரவுகள்
- நிதிரீதியான உதவி
- உங்களின் குடியிருப்பு உரிமையாளருடன் மத்தியஸ்தம்
- வெளியேற்றல் தொடர்பான விசாரணைகளில் ஆதரவு
- மீளவும் குடியிருப்பைக் கண்டுபிடிப்பதற்கான ஆதரவு

வெளியேற்றப்படலை எதிர்கொள்ளும் ரொறன்ரோவிலுள்ள அனைத்து வாடகைக்குடிருப்பாளர்-களுக்கும் இலவசமான சில ஆதரவு சேவைகளுக்குத் தகுதி இருக்கக்கூடும். இருப்பினும், குறைந்த வருமானம் பெறும் வாடகைக்குடியிருப்பாளர்களுக்கு உதவிசெய்வதற்காகத் தகுதிக்கான அளவுகோல்களைச் சில சேவைகள் கொண்டுள்ளன.

முன்கூட்டியே ஆதரவு சேவைகளுடன் தொடர்புகொள்ளுங்கள். வெளியேற்றப்படல் மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது, முன்கூட்டியே ஆதரவைப் பெறுவது அழுத்தத்தைக் குறைக்கலாம். கிடைக்கும் சேவைகளுடன் தொடர்புகொள்வதற்கு ஆதரவுப் பணியாளர்கள் உங்களுக்கு உதவ முடியும்.

பின்னிணைப்பு Bஐப் பாருங்கள்: ஆதரவளிக்கும் முகமைகள் பற்றிய மேலதிக தகவல்கள் 11ம் பக்கத்திலுள்ளன.

வெளியேற்றப்படலைத் தடுத்தல் பற்றிய மேலோட்டம்

வாடகைக்குடியிருப்பாளர் குத்தகைச் சட்டம் மற்றும் குடியிருப்பு உரிமையாளர் மற்றும் வாடகைக்குடியிருப்பாளர் சபை

வாடகைக்குடியிருப்பாளர் குத்தகைச் சட்டம் (RTA) என்பது குடியிருப்பு உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்புகளை வாடகைக்கு எடுக்கும் வாடகைக்குடியிருப்பாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை நிர்ணயிக்கும் ஒன்ராறியோச் சட்டமாகும். வாடகைக்குடியிருப்பு ஒப்பந்தங்கள், வாடகை அதிகரிப்புகள், வெளியேற்றப்படல் மற்றும் திருத்தவேலைகள் தொடர்பான பொறுப்புகள் அல்லது தேவைப்பாடுகள் பற்றி RTA இல் குறிப்பிடப்பட்டுள்ளது. RTA இன் தேவைப்பாடுகளை அமல்படுத்துவதிலோ அல்லது குடியிருப்பு உரிமையாளர்கள் மற்றும் வாடகைக்குடியிருப்பாளர்களின் இடையிலுள்ள சர்ச்சைகளைத் தீர்த்துவைக்கும் தீர்ப்பாயமான குடியிருப்பு உரிமையாளர் மற்றும் வாடகைக்குடியிருப்பாளர்களின் சபையின் (LTB) நடவடிக்கைகளிலோ ரொறன்ரோ நகருக்கு எந்தப் பங்கும் இல்லை, அதை ஒன்ராறியோ மாகாணமே மேற்பார்வைசெய்கிறது.

வெளியேற்றப்படல் தொடர்பான விசாரணைகளை LTB நடத்துகிறது, அதன்போது, வழக்குத் தொடர்பான தகவல்களை வழங்குவதற்கான சந்தர்ப்பம் குடியிருப்பு உரிமையாளர்களுக்கும் வாடகைக்குடியிருப்பாளர்களுக்கும் வழங்கப்படும். LTB இன் தீர்ப்புவழங்குபவர் (adjudicator) விசாரணைக்குத் தலைமை தாங்குவார், வழங்கப்பட்ட ஆதாரங்களை மதிப்பாய்வு செய்வார், அத்துடன் சட்டப்பூர்வமாக அமுல்படுத்தக்கூடிய முடிவை எடுப்பார். RTA இன் கீழ், குடியிருப்பு உரிமையாளர்களுக்கும் வாடகைக்குடியிருப்பாளர்களுக்கும் இருக்கும் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய **தகவல்கள்**[2] LTB ஆல் வழங்கப்படுகின்றன, அத்துடன் LTB இல் மத்தியஸ்தம் ஊடாக முரண்பாடுகளைத் தீர்த்துக்கொள்ள முடியும்.

பொதுவாக வளாகங்களிலுள்ள குடியிருப்புக்களில் அல்லது ஒரு கல்லூரியால் அல்லது பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மாணவர் குடியிருப்பு போன்ற குடியிருப்புக்களில் வசிக்கும் மாணவர்களுக்கு RTA இல் உள்ள பாதுகாப்புகள் பொருந்தமாட்டாது. மேலும் அறிவதற்கு, சட்ட நிபுணரை அணுகுமாறு சர்வதேச மாணவர்கள் உள்ளடங்கலான மாணவர்கள் பரிந்துரைக்கப்படுகிறார்கள். சர்வதேச மாணவர்கள் மற்றும் புதியகுடிவரவாளர்கள் 416-292-7510 ஐ அழைப்பதன் மூலம் புலம்பெயர்ந்தோர் மற்றும் சமூக சேவைகளுக்கான மையத்திலிருந்து (Centre for Immigrant and Community Services) விசேட ஆதரவுகளையும் தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம்

வாடகைக்குடியிருப்பாளர் குத்தகைச் சட்டத்தின் கீழ் யாருக்குப் பாதுகாப்பு உண்டு

ஒன்ராறியோ மாகாணத்தின் வாடகைக்குடியிருப்பாளர் குத்தகைச் சட்டம் (RTA) குடியிருப்பு உரிமையாளர்கள் மற்றும் குடியிருப்புக்களை வாடகைக்கு எடுக்கும் வாடகைக்குடியிருப்பாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளை வகுக்கிறது, அத்துடன் அவற்றை செயல்படுத்துவதற்கான செயல்முறையை நிர்ணயிக்கிறது. சட்டத்திற்குப் புறம்பாக வெளியேற்றப்படுவதிலிருந்து RTA பாதுகாப்பை வழங்குவதால், அதனால் நீங்கள் பாதுகாக்கப்படுகிறீர்களா என்பதைத் விளங்கிக்கொள்வது அவசியமாகும்.

பின்வருவன உங்களுக்குப் பொருந்தினால், RTA **ஆல் நீங்கள் பாதுகாக்கப்பட்டிருக்கக்கூடும்**[3]:

- ஒரு முழு apartmentஐ, ஒரு தனி அறையை, ஒரு basement apartmentஐ அல்லது ஒரு முழு வீட்டை நீங்கள் வாடகைக்கு எடுக்கிறீர்கள்.
- நீங்கள் ஒரு சர்வதேச மாணவர், புதியகுடிவரவாளர், நிரந்தர வதிவாளர், ஆவணமற்ற புலம்பெயர்ந்தோர் அல்லது குடிமகன், உங்களின் வாடகை நிலைமை மேலேயுள்ளவாறு அடையாளம் காணப்பட்டுள்ளது.
- உரிமம் பெற்ற அல்லது உரிமம் பெறாத பல குத்தகைக்காரர் இருக்கும் குடியிருப்பில் (rooming house) ஒரு அறையை வாடகைக்கு எடுத்துள்ளீர்கள்.

பின்வருவன உங்களுக்குப் பொருந்தினால், RTA **ஆல் நீங்கள் பாதுகாக்கப்படாமல் இருக்கக்கூடும்**[3]:

- உங்களின் குடியிருப்பு உரிமையாளருடன் ஒரு குளியலறையை அல்லது சமையலறையை நீங்கள் பகிர்ந்துகொள்கிறீர்கள், பருவகாலத்துக்குரிய அல்லது தற்காலிகக் குடியிருப்புக்களை வாடகைக்கு எடுக்கிறீர்கள், வணிகத்துக்குரிய இடமாகவும் இருக்கும் குடியிருப்பு ஒன்றை வாடகைக்கு எடுக்கிறீர்கள் அல்லது இன்னொருவருடன் அறையைப் பகிரும் (roommate) சூழ்நிலையில் நீங்கள் வசிக்கிறீர்கள்.
- அவசரகாலநிலைக்கான தங்குமிடம், மருத்துவமனை, nursing home (நீண்ட காலப் பராமரிப்பு வசதி), சிறை அல்லது மாணவர் குடியிருப்பு அல்லது விடுதி ஒன்றில் நீங்கள் வசிக்கிறீர்கள்

2 https://tribunalsontario.ca/documents/ltb/Brochures/A%20Guide%20to%20the%20Residential%20Tenancies%20Act.html

3 இந்த பட்டியலில் அனைத்து வகையான வாழ்க்கை சூழ்நிலைகளும் இல்லை. RTA ஆல் நீங்கள் பாதுகாக்கப்படுகிறீர்களா என்பதை அறிந்துகொள்வது சிரமமானதாக இருக்கலாம். ஒரு சட்ட நிபுணரைத் தொடர்புகொண்டு, ரொறன்ரோவில் இருக்கும் வெளியேற்றப்படலைத் தடுக்கும் சேவைகளிலிருந்து இலவச ஆதரவுகளைப் பெறுங்கள். உதவக்கூடிய நிறுவனங்களுக்கு 11ம் பக்கத்தைப் பாருங்கள்.

வாடகைக்குடியிருப்பாளராக உங்களின் உரிமைகள்

ஒன்ராறியோவின் பெரும்பாலான குடியிருப்புக்களிலுள்ள வாடகைக்குடியிருப்பாளர்கள் எழுந்தமானமாக வெளியேற்றப்படலை RTA இல் அடையாளம் காணப்பட்டிருக்கும் உரிமைகள் பாதுகாக்கின்றன. இந்த உரிமைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன:

- **உங்களின் குடியிருப்பு உரிமையாளர் உங்களைத் தங்களின் எண்ணப்படி வெளியேற்ற முடியாது**. வெளியேறும்படியான உத்தரவை குடியிருப்பு உரிமையாளர் மற்றும் வாடகைக்குடியிருப்பாளர்கள் சபை (LTB) வழங்கினாலேயன்றி, குடியிருப்பு உரிமையாளர் ஒருவர் உங்களை வெளியேற்ற முடியாது. வெளியேற்றுவதற்கான உத்தரவு ஒன்றை பெறுவதற்குப் பல மாதங்கள் ஆகலாம், அத்துடன் அது பொதுவில் LTB விசாரணைக்குப் பின்னரே வழங்கப்படும்.
- **வெளியேற்றல் தொடர்பான விசாரணை ஒன்றுக்கான உரிமை உங்களுக்கு உள்ளது**. LTB விசாரணையின் போது, உங்களை ஏன் வெளியேற்றக்கூடாது அல்லது நீங்கள் வெளியேறுவதை ஏன் தாமதப்படுத்த வேண்டும் என்பதை விளங்கப்படுத்துவதற்கான சந்தர்ப்பம் உங்களுக்குக் கிடைக்கும். வெளியேற்றம் தொடர்பான விசாரணைகள் இருக்கும் வாடகைக்குடியிருப்பாளர்களுக்குச் சட்டரீதியான ஆதரவு கிடைக்கும் (சட்டரீதியான ஆதரவுகள் பற்றிய பட்டியலுக்கு 11ம் பக்கத்தைப் பாருங்கள்). வெளியேற்ற விசாரணை ஒன்றுக்கு விண்ணப்பிக்க முன்பாக, LTB இன் பொருத்தமான படிவங்களைப் பயன்படுத்தி எழுத்துமூலமான வெளியேற்ற அறிவிப்பொன்றை உங்களின் குடியிருப்பு உரிமையாளர் உங்களுக்கு வழங்க வேண்டும். வெளியேற்றம் தொடர்பான அறிவிப்புக்களை அவர்கள் தந்ததும் நீங்கள் வெளியேற வேண்டும் என்றில்லை; அவை வெளியேற்றும் செயல்முறையின் முதல் கட்டம் மட்டும்தான்.
- **பொருத்தமான மற்றும் குறிப்பிடத்தக்க காரணங்களுக்காக மட்டுமே உங்களை வெளியேற்ற முடியும்**. உங்களின் குடியிருப்பு உரிமையாளர் உங்களை வெளியேற்ற விரும்புகிறார் என்ற காரணம் மட்டும் போதாது.

வாடகை அதிகரிப்புக்கள்

அதிகளவான வருடாந்த அதிகரிப்பிலிருந்து ஒன்ராறியோவில் உள்ள பெரும்பாலான வாடகைக்குடியிருப்பாளர்களை RTA இன் வாடகைக் கட்டுப்பாட்டு விதிகள் பாதுகாக்கின்றன.

நவம்பர் 15, 2018க்கு முன்னர் கட்டப்பட்ட அல்லது அதற்கு முன்பாக வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டடங்கள்

வாடகை அதிகரிப்புத் தொடர்பான RTA இன் வழிகாட்டுதல்களின்படி, பொதுவாக வருடத்துக்கு ஒருமுறை நிர்ணயிக்கப்பட்ட சதவீதத்தால் மட்டுமே உங்களின் வாடகையை உங்களின் குடியிருப்பு உரிமையாளர் பொதுவாக அதிகரிக்க முடியும்.

2024 இல், உங்களின் குடியிருப்பு உரிமையாளர் உங்களின் வாடகையை அதிகபட்சம் 2.5 சதவீதத்தால் அதிகரிக்கலாம்.

நவம்பர் 15, 2018க்குப் பின்னர் கட்டப்பட்ட அல்லது அதற்குப் பின்பாக வாடகைக்கு எடுக்கப்பட்ட கட்டடங்கள்

வாடகை அதிகரிப்பு வழிகாட்டுதல்களில் இருந்து உங்களின் குடியிருப்புக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

உங்களின் வாடகையை, உங்களின் குடியிருப்பு உரிமையாளர் வருடத்துக்கு ஒரு முறை எவ்வளவு தொகையினாலும் அதிகரிக்கலாம்.

2018 ஆம் ஆண்டுக்கு முன்பாக வாடகைக் குடியிருப்புக் கட்டப்பட்டிருப்பதுடன், வாடகைக் கட்டுப்பாட்டின் கீழ் அது இருக்கிறது என்றாலும்கூட, வாடகை அதிகரிப்பு வழிகாட்டியின் சதவீதத்தைவிட அதிகமாக குடியிருப்பு உரிமையாளர் வாடகையை அதிகரிக்கக்கூடிய சில சந்தர்ப்பங்கள் உள்ளன. அவ்வாறு செய்வதற்கு, LTB விசாரணை ஒன்றுக்குக் குடியிருப்பு உரிமையாளர்கள் விண்ணப்பிக்க வேண்டும், அதன்போது, அந்த வாடகை உயர்வுக்கு வாடகைக்குடியிருப்பாளர்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கலாம். உங்களின் வாடகையை உங்களின் குடியிருப்பு உரிமையாளர் சட்டவிரோதமாக உயர்த்தலாம் என நீங்கள் நினைத்தால், உங்களுக்கு அருகிலிருக்கும் Legal Aid Ontario இன் சட்ட மையத்தை அல்லது சட்டரீதியான பிரதிநிதியைத் தொடர்பு கொள்ளுங்கள்.

வாடகைக்கான ஆதரவுகள்

உங்களின் வாடகையைச் செலுத்துவதில் உங்களுக்குச் சிரமங்கள் இருந்தால், வருமான ஆதரவுத் திட்டங்கள் உங்களுக்கு உதவக்கூடும். ஒன்ராறியோவின் திட்டங்களுக்கான தகுதி உங்களுக்கு இருக்கின்றதா என்பதை அறிவதற்கு 211ஐ நீங்கள் அழைக்கலாம். உங்களுக்கு நிலுவைகள் இருந்தால், City of Toronto Rent Bank திட்டம் உங்களின் வாடகைப் பாக்கிகளைச் செலுத்துவதற்கு உங்களுக்கு உதவக்கூடும். மேலதிக தகவல்களுக்கு toronto.ca/rentbank க்குச் செல்லுங்கள்.

வெளியேற்றப்படலுக்கான இழப்பீடு

வெளியேற்றங்களின் வகைக்கு ஏற்ப இழப்பீடு மாறுபடும். இழப்பீடு என்பது சிக்கலான ஒரு விஷயமாகும், எனவே உங்களுக்கு அருகிலிருக்கும் Legal Aid Ontario சட்ட மையத்தை அல்லது சட்டரீதியான பிரதிநிதியைத் தொடர்பு கொள்வது பரிந்துரைக்கப்படுகிறது.

குடியிருப்பு உரிமையாளர்களில் சிலர், தங்களின் வாடகைக்குடியிருப்பாளர்களின் வெளியேற்றத்தை விரைவுபடுத்துவதற்காக அல்லது அவர்கள் விரும்பாதபோது வெளியேறுவதை ஊக்குவிப்பதற்காக அதிக இழப்பீடு வழங்குகிறார்கள். இவை பெரும்பாலும் 'திறப்புக்கான பண ('cash for keys)' ஒப்பந்தங்கள் என அழைக்கப்படுகின்றன. இந்த ஒப்பந்தங்களில் உள்ளடக்கப்படும் இழப்பீட்டுத் தொகை மாறுபடலாம். உங்களின் குடியிருப்பு உரிமையாளர் திறப்புக்கான பணம் என்ற மாதிரியாக உங்களுடன் பேரம் பேசலாம், ஆனால் அதை நீங்கள் ஒப்புக்கொள்ளவோ, அதில் கையொப்பமிடமோ வேண்டியதில்லை. குத்தகையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தன்னார்வ ஒப்பந்தமான N11 என்ற ஒப்பந்தத்துடன் குடியிருப்பு உரிமையாளர் இழப்பீட்டை வழங்கக்கூடும். இந்த ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவது தொடர்பாக வாடகைக்குடியிருப்பாளர்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும், ஏனெனில் அந்தப் படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியில் நீங்கள் வெளியேறுவதை அந்தப் படிவம் கட்டாயமானதாக்கலாம். இந்த வகையான ஒப்பந்தங்களில் கையொப்பமிடுவதற்கு முன்னர் சட்டப் பிரதிநிதி ஒருவருடன் நீங்கள் தொடர்பு கொள்வது பரிந்துரைக்கப்படுகிறது.

பொருத்தமான இழப்பீட்டுத் தொகையை மதிப்பிடுவதற்கு, தங்களுடைய குத்தகையின்படி அல்லது அது இல்லாமல் அந்த வாடகைக் குடியிருப்புக்கு எவ்வளவு வாடகை வரும் என்பது பற்றி realtor (வீடு விற்பனை/வாடகை முகவர்) ஒருவருடன் பேசுவதற்கு வாடகைக்குடியிருப்பாளர்கள் விரும்பக்கூடும்.

வெளியேற்றப்படலை எதிர்த்துப் போராடுவதா அல்லது வெளியேறுவதா என்பதை தீர்மானித்தல்

குடியிருப்பு ஒன்றில் வாடகைக்குடியிருப்பாளராக நீங்கள் இருப்பதுடன், அந்தக் குடியிருப்பு உரிமையாளர் அல்லது வாடகைச் சொத்து உரிமையாளருடன் உங்களுக்குப் பிரச்சினைகள் ஆரம்பித்திருந்தால், வெளியேற்றப்படல் செயல்முறை ஆரம்பிப்பதற்கு முன்பாக அவற்றைத் தீர்ப்பதற்கு முயற்சியுங்கள். வெளியேற்றம் என்பது LTB ஆல் நிர்வகிக்கப்படும் ஒரு முறைசார் செயல்முறையாகும். குடியிருப்பு ஒன்றில் வாடகைக்குடியிருப்பாளராக இருப்பவரை சட்டரீதியாக வெளியேற்றுவதற்குத் தொடர்ச்சியான நடவடிக்கைகளை ஒவ்வொரு குடியிருப்பு உரிமையாளரும் பின்பற்ற வேண்டும்.

வெளியேற்றப்படலை எதிர்த்துப் போராடுவதா அல்லது வெளியேறுவதா என்பதைத் தீர்மானிப்பது மிகவும் சிரமமானதாக இருக்கலாம், அத்துடன், உங்களின் தெரிவுகளை நீங்கள் கருத்தில்கொள்ளும்போது, பின்வருவன உள்ளடங்கலான பல்வேறு விடயங்களைப் பற்றி நீங்கள் யோசிக்கவேண்டியிருக்கும்.

- வாடகைச் சந்தையில் அதே வாடகையில் புதியதொரு இடத்தை நீங்கள் மீளவும் கண்டுபிடிப்பது கடினமானதாக இருக்கலாம்
- வேறொரு பொருத்தமான குடியிருப்பைக் உங்களால் கண்டுபிடிக்க முடியாவிட்டால், உங்களின் சமூகத்தை விட்டு நீங்கள் வெளியேறுவது வெளியேறலின் முடிவாக இருக்கலாம்.
- சட்டரீதியான செயல்முறை நீண்டதாகவும் கடினமானதாகவும் இருக்கலாம்
- வெளியேறுவதற்கான இழப்பீடு பெறுவது (உங்களின் குடியிருப்பு உரிமையாளருடன் ஒப்பந்தம் செய்து கொள்வது) உதவக்கூடும்.

சட்டரீதியான ஆலோசனைகளையும் ஆதரவுகளையும் பெற்றுக்கொள்வது வெளியேற்றப்படலை எதிர்த்துப் போராடுவதா, இல்லையா என்பது பற்றிய முடிவை எடுப்பதற்கு உங்களுக்கு உதவும். உங்களின் சூழ்நிலை பற்றிய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கு பின்வரும் அமைப்புக்களைத் தொடர்பு கொள்ளுங்கள்:

- Legal Aid Ontario: 416-979-1446
- Federation of Metro Tenants' Association (FMTA) Tenant Hotline (வாடகைக்குடியிருப்பாளர்கள் சங்கம்- நேரடி இணைப்பு: 416-921-9494
- Canadian Centre for Housing Rights (குடியிருப்பு உரிமைகளுக்கான கனேடிய மையம்/CCHR): 416-944-0087 (கட்டணமற்ற தொலைபேசி: 1-800-263-1139)

பல குத்தகைக்காரர் இருக்கும் (Rooming/அறைகள்) குடியிருப்புகள்

வாடகைக்கென தனிப்பட்ட படுக்கையறையையும், ஏனைய வாடகைக்குடியிருப்பாளர்களுடன் பகிர்ந்துகொள்ளும் சமையலறை மற்றும்/அல்லது கழிவறையையும் கொண்டிருக்கும் கட்டடங்கள் பல குத்தகைக்காரர் இருக்கும் குடியிருப்புகள் அல்லது rooming houses என்படுகின்றன. பல வாடகைக்குடியிருப்பாளர்களைக் கொண்ட குடியிருப்புகளில் இருக்கும் வாடகைக்குடியிருப்பாளர்கள் தங்களின் குடியிருப்பு உரிமையாளருடன் தனிப்பட்ட வாடகை ஒப்பந்தங்களை அல்லது குத்தகைகளை வைத்திருப்பார்கள், எனவே தங்களின் அறையின் வாடகையைச் செலுத்துவதற்கே அவர்கள் பொறுப்பாக இருப்பார்கள், வீட்டிலுள்ள மற்ற அறைகளுக்குப் பொறுப்பாக இருக்கமாட்டார்கள். நான்கு அல்லது அதற்கு மேற்பட்ட அறைகளைக் கொண்ட குடியிருப்புகள் ரொறன்ரோவில் இவ்வாறு வாடகைக்கு விடப்படுகின்றன, அவை பல குத்தகைதாரர் குடியிருப்புகள் என்று அழைக்கப்படுகின்றன.

பல ஆண்டுகளாக, சில பகுதிகளில் மட்டுமே பல குத்தகைதாரர் குடியிருப்புகள் இருப்பதற்கு ரொறன்ரோ நகர் அனுமதித்திருந்தது. பல குத்தகைதாரர் குடியிருப்புகளுக்கான புதிய ஒழுங்குமுறைக் கட்டமைப்பு ஒன்று மார்ச் 31, 2024 முதல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பல குத்தகைதாரர் குடியிருப்புகளை நகர் முழுவதும் இந்தக் கட்டமைப்பு அனுமதிப்பதுடன், உரிமம் மற்றும் நில அமைப்புக்களுக்கேற்ப (zoning) தரநிலைகளையும் வகுத்துள்ளது. பல குத்தகைதாரர் குடியிருப்புகளை வைத்திருக்கும் குடியிருப்பு உரிமையாளர்கள் ரொறன்ரோ நகரிடமிருந்து உரிமத்தைப் பெற்றிருக்க வேண்டும். உரிமம் வழங்கும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பிற்குள் குடியிருப்பு உரிமையாளர்களைக் கொண்டுவருவதற்காக அவர்களுடன் இணைந்து நகர்ப் பணியாளர்கள் செயல்படுகிறார்கள் ரொறன்ரோவில் உள்ள பல குத்தகைதாரர் குடியிருப்புகள் பாதுகாப்பானவை என்பதை உறுதிசெய்வதற்கு இந்தக் கட்டமைப்பு உதவிசெய்கிறது; கட்டுபடியாகக்கூடிய வாடகையில் நகர் முழுவதும் குடியிருப்புக்களைப் பெறுவதற்கு வசதிசெய்தலும் தக்கவைத்தலும்; மற்றும் பல குத்தகைதாரர் குடியிருப்புக்களை வைத்திருப்பதைச் சட்டப்பூர்வமானதாக்குவதற்கு வழிசெய்தல்.

பல குத்தகைக்காரர் இருக்கும் குடியிருப்புக்களில் உள்ள குத்தகைக்காரருக்கான முக்கிய தகவல்கள்

1. வாடகைக்குடியிருப்பாளர்களின் உரிமைகளைக் கூறுவதுடன், வெளியேற்றப்படலில் இருந்து பாதுகாப்பையும் வழங்கும் சட்டமான ஒன்ராறியோவின் RTA ஆல் உங்களின் குத்தகை காப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை அறியுங்கள். (4ம் பக்கத்திலுள்ள “குடியிருப்பு குத்தகைச் சட்டத்தால் காப்பீடு செய்யப்படுபவர்கள் யார்” என்பதைப் பாருங்கள்).
2. பல குத்தகைதாரர்கள் வசிக்கும் குடியிருப்பில் ஒரு அறையை நீங்கள் வாடகைக்கு எடுத்திருக்கிறீர்கள், அத்துடன் RTA ஆல் காப்பீடு செய்யப்பட்டிருக்கிறீர்கள் என்றால், இந்தக் கையேட்டில் உள்ள தகவல்கள் உங்களுக்குப் பொருந்தும்.
3. ஏனைய வாடகைக்குடியிருப்பாளர்களுக்கு இருக்கும் அதே உரிமைகளும் வெளியேற்றப்படலிருந்து கிடைக்கும் பாதுகாப்பும் உங்களுக்கும் கிடைக்கும். வெளியேற்றப்படுவதில் இருந்து பாதுகாக்கும் RTA இன் பாதுகாப்பு உரிமம்பெற்ற மற்றும் உரிமம்பெறாத குடியிருப்புக்களில் இருக்கும் வாடகைக்குடியிருப்பாளர்களுக்கு ஒரே மாதிரியானதாக இருக்கும்.
4. உங்களின் குடியிருப்பு உரிமையாளர் வாய்மொழியாகவோ, எழுத்து மூலமாகவோ அல்லது வெளியேற்ற அறிவிப்பு மூலமாகவோ வெளியேறும்படி கேட்டால் அல்லது சொன்னால் நீங்கள் வெளியேறத் தேவையில்லை. விசாரணை ஒன்றின்பின், குடியிருப்பு உரிமையாளர் மற்றும் வாடகைக்குடியிருப்பாளர் சபையினால் (LTB) வழங்கப்படும் வெளியேறச் சொல்லும் உத்தரவின் மூலம் மட்டுமே உங்களை வெளியேற்ற முடியும், அதற்குப் பல மாதங்கள் ஆகலாம்.
5. உரிமம் இல்லாத குடியிருப்பாக இருந்தால், உங்களின் குடியிருப்பு உரிமையாளர் உங்களை எழுந்தமானமாக வெளியேற்ற முடியாது
6. உரிமத்தைப் பெறுவதற்கு, கட்டடம் மற்றும் தீ தொடர்பான அவசியமான பாதுகாப்பு நிபந்தனைகளைப் பூர்த்திசெய்யும் திருத்தவேலைகளை மேற்கொள்ளும்படி குடியிருப்பு உரிமையாளர்களை நகர் கேட்கக்கூடும். RTA ஆல் நீங்கள் காப்பீடு செய்யப்பட்டிருந்தால், குடியிருப்பு உரிமையாளர் குடியிருப்பைத் திருத்தும்போது உங்களுக்கும் அதே பாதுகாப்பு பொருந்தும்.
7. பல குத்தகைதாரர் குடியிருப்புகள் பாதுகாப்பாக உள்ளன மற்றும் நன்கு பராமரிக்கப்படுகின்றன என்பதை உறுதிசெய்வது குடியிருப்பு உரிமையாளர்களின் பொறுப்பாகும். உரிமம்பெற்ற அல்லது உரிமம்பெறாத குடியிருப்புகளில் பராமரிப்புத் தொடர்பான பிரச்சினைகள் அல்லது பாதுகாப்புத் தொடர்பான கரிசனைகள் உங்களுக்கு இருந்தால், 311ஐ அழைப்பதன் மூலம் அவற்றைப் பற்றி நீங்கள் புகாரளிக்கலாம். ஆரோக்கியம் மற்றும் பாதுகாப்புத் தொடர்பாக உடனடியான அபாயம் கண்டறியப்படும்வரை, பல குத்தகைதாரர் குடியிருப்புகளை நகர் மூடமாட்டாது.



ஒன்ராறியோவில் வெளியேற்றல் நடைமுறை

வெளியேற்றம் என்பது குடியிருப்பு உரிமையாளர் மற்றும் வாடகைக்குடியிருப்பாளர் சபையினால் (LTB) நிர்வகிக்கப்படும் ஒரு முறைசார் செயல்முறையாகும். குடியிருப்பு ஒன்றில் வாடகைக்குடியிருப்பாளராக இருப்பவரை சட்டரீதியாக வெளியேற்றுவதற்குத் தொடர்ச்சியான நடவடிக்கைகளை ஒவ்வொரு குடியிருப்பு உரிமையாளரும் பின்பற்ற வேண்டும். கீழே குறிப்பிடப்பட்டிருக்கும் இந்தப் படிமுறைகளை கட்டங்களென இந்தக் கையேடு விபரிக்கிறது.

சட்டரீதியான ஆலோசனையை இந்தக் கட்டத்தில் நீங்கள் பெற்றிருக்கவில்லை என்றால், முடிந்தளவு விரைவாக நீங்கள் அதைச் செய்யவேண்டும். உதவக்கூடிய நிறுவனங்களுக்கு 11ம் பக்கத்தைப் பாருங்கள்.

உங்களின் குடியிருப்பு உரிமையாளரிடமிருந்து எவ்வகையான வெளியேற்ற அறிவிப்புகள் உங்களுக்குக் கிடைத்திருந்தாலும், உங்களின் குடியிருப்பை விட்டு நீங்கள் உடனடியாக வெளியேற வேண்டியதில்லை. வெளியேறச் சொல்லும் முறையான உத்தரவு LTB இலிருந்து உங்களுக்குக் கிடைக்கும்வரை அல்லது வெளியேறுவதற்கு நீங்கள் ஒப்புக்கொள்ளும்வரை நீங்கள் வெளியேற வேண்டியதில்லை.

பின்வருவன உள்ளடங்கலாகப் பல்வேறு காரணங்களுக்கான வெளியேற்றங்கள் குடியிருப்புக் குத்தகைச் சட்டத்தினால் (RTA) இனம்காணப்பட்டுள்ளன:

- வாடகை நிலுவைகள் (நீண்ட காலமாக வாடகை செலுத்தவில்லை எனப் பொருள்படும்) (N4)
- குடியிருப்பு உரிமையாளரின் சொந்தப் பயன்பாடு (N12)
- குடியிருப்பை வாங்குபவரின் சொந்தப் பயன்பாடு (N12)
- இடித்தல், புனரமைப்பு அல்லது மாற்றியமைத்தல் (N13)
- தொடர்ச்சியாகத் தாமதமான கட்டணம் (N8)
- மற்றவர்களுக்கு இடையீடுசெய்தல், சேதப்படுத்துதல் அல்லது அளவுக்கதிகமானோர் வாழல் (N5)
- சட்டவிரோதச் செயல் அல்லது வருமானத்தைத் தவறாகப் பிரதிநிதித்துவம் செய்தல் (வருமானத்திற்கு ஏற்ற வாடகையாக இருந்தால்) (N6)
- வாடகைக்கு இருக்கும் இடத்தில் அல்லது குடியிருப்பு வளாகத்தில் பாரதூரமான பிரச்சினைகளைக் கொடுத்தல் (N7)

இவ்வகையான வெளியேற்றங்கள் பற்றிய மேலதிக தகவல்கள் கிடைக்கின்றன: tribunalsontario.ca/ltb

வெளியேற்றலுக்கான படிமுறைகள்

கட்டம் 1 **வெளியேற்றல் பற்றிய அறிவிப்பு**	**கட்டம்** 2 **வெளியேற்றல் தொடர்பான விண்ணப்பம்**	**கட்டம்** 3 **வெளியேற்றம் தொடர்பான விசாரணை**	**கட்டம்** 4 **வெளியேற்றம் தொடர்பான விசாரணை முடிவு**
குத்தகையை முடிப்பதற்கான அறிவிப்பு எனப்படும் எழுத்துமூலமான அறிவிப்பைக் குடியிருப்பு உரிமையாளர் உங்களுக்கு வழங்குகிறார்.	வெளியேற்றுவதற்காக, குடியிருப்பு உரிமையாளர் LTBஇல் வெளியேற்றல் தொடர்பான விண்ணப்பமொன்றைத் தாக்கல் செய்கிறார். விசாரணை தொடர்பான அறிவிப்பு ஒன்று உங்களுக்குத் தபாலில் அல்லது மின்னஞ்சலில் கிடைக்கும்.	நீங்களும் உங்களின் குடியிருப்பு உரிமையாளரும் LTB விசாரணையில் கலந்து கொள்வீர்கள்.	வெளியேறப்படுவதானால், Sheriff (அரச அதிகாரி) ஒருவர் மூலம் செயல்படுத்தப்படும் வெளியேற்றத்திற்கான உத்தரவு குடியிருப்பு உரிமையாளருக்குக் கிடைக்கும்.

பின்னிணைப்பு A: மாதிரிகள்

மாதிரிக் கடிதம்: திருத்தவேலைக்காக அல்லது புனரமைப்புக்குக்காக வெளியேற்றப்படலை முதல் தடவை மறுப்பதற்கான உரிமை

திருத்தவேலை அல்லது புனரமைப்புத் தொடர்பான N13 வெளியேற்ற அறிவிப்பு உங்களின் குடியிருப்பு உரிமையாளரிடமிருந்து உங்களுக்குக் கிடைத்திருக்கிறது, புனரமைப்பின்போது நீங்கள் வெளியேற வேண்டியிருக்கிறது என்றால், முதல் மறுப்புக்கான உரிமை உங்களுக்கு உள்ளது. இதன் கருத்து என்னவென்றால், அந்த வாடகைக் குடியிருப்புக்கு மீளவும் நீங்கள் செல்ல உத்தேசித்துள்ளீர்கள் எனக் கூறும் எழுத்துமூலமான அறிவிப்பை அந்தக் குடியிருப்பு உரிமையாளருக்கு நீங்கள் வழங்கினால், புனரமைப்பு முடிந்தபின்னர் உங்களின் அந்தப் பழைய குடியிருப்பை உங்களுக்கு உங்களின் குடியிருப்பு உரிமையாளர் வழங்க வேண்டும்.

உங்களின் குடியிருப்பு உரிமையாளரிடம் நீங்கள் தொடர்பாடுவதற்கு உதவும் மாதிரிக் கடிதம் ஒன்று கீழே உள்ளது. இது ஒரு மாதிரிக் கடிதம் மட்டுமே, இது சட்டரீதியான ஆலோசனை அல்ல.

நீங்கள் வெளியேறுவதற்கு முன்பாக, அந்தக் குடியிருப்பு உரிமையாளரிடம் இந்தக் கடிதம் கொடுக்கப்பட வேண்டும்.

<திகதியை எழுதுங்கள் >

அன்புள்ள <உங்களின் குடியிருப்பு உரிமையாளரின் பெயரை எழுதுங்கள் >,

< வெளியேற்றல் தொடர்பான அறிவிப்பு உங்களுக்குக் கிடைத்த திகதியை எழுதுங்கள்> அன்று, வெளியேறும்படி நீங்கள் என்னைக் கேட்கும் N13 அறிவிப்பு (உங்களின் குத்தகையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அறிவிப்பு, ஏனெனில் வாடகைக் குடியிருப்பை இடித்துத் தள்ள, திருத்த அல்லது வேறு பயன்பாட்டிற்கு மாற்றுவதற்கு குடியிருப்பு உரிமையாளர் விரும்புகிறார்) ஒன்று உங்களிடமிருந்து எனக்குக் கிடைத்துள்ளது.

திருத்தவேலைகளை அல்லது புனரமைப்பை நீங்கள் முடிந்தபின்னர், மீளவும் அந்தக் குடியிருப்புக்குச் செல்வதற்கு எனக்கு உரிமையுண்டு. நான் மீளவும் குடியிருக்க விரும்புகிறேன் என்று உங்களுக்கு நான் தெரிவிக்கும் எனது எழுத்துமூலமான அறிவிப்பாக இதைத் தயவுசெய்து கருதுங்கள். அத்துடன், எனது முகவரி மற்றும் தொடர்புத் தகவல்களைச் சேர்த்திருக்கிறேன்:

<தபால் முகவரியை எழுதுங்கள் >

<தொலைபேசி இலக்கத்தை எழுதுங்கள் >

<மின்னஞ்சல் முகவரியை எழுதுங்கள் >

முதல் மறுப்புக்கான உரிமையும், பதிலளிப்பதற்கான நியாயமான கால அவகாசமும் எனக்கு வழங்கப்படாத பட்சத்தில், குடியிருப்பு உரிமையாளர் மற்றும் குத்தகைதாரர் சபைக்கு நான் இதை அறிவிக்கக்கூடும்.

[கையொப்பம்]

<உங்களின் பெயரை எழுதுங்கள்>

நிலுவைகளைத் திருப்பிச் செலுத்தும் திட்டம் பற்றிய விபரங்கள் (Worksheet)

நீங்கள் வாடகை செலுத்த வேண்டியிருந்தால், அந்தப் பணத்தைச் செலுத்தும் திட்டத்தைப் பற்றி உங்களின் குடியிருப்பு உரிமையாளரிடம் அல்லது உங்களின் LTB விசாரணையில் ஒன்றின்போது பேசுவதற்கு இந்த worksheet உங்களுக்கு உதவும். உங்களின் பதில்களை கீழே எழுதுங்கள்.

இந்த worksheet ஒன்ராறியோவின் குத்தகைதாரர்களுக்கான பரிந்துரைப்பு மையத்தினால் (ACTO) உருவாக்கப்பட்டது.

தேவையான தகவல்கள்	விபரங்கள்
எனது மாதாந்த வாடகை	$
இன்று வரை நான் செலுத்த வேண்டியிருக்கும் வாடகைத் தொகை	$
விண்ணப்பத்துக்கான குடியிருப்பு உரிமையாளரின் கட்டணம்	$
போதுமான நிதி இல்லாமலிருந்ததற்கான (NSF) கட்டணம் ($20 மற்றும் வங்கிக் கட்டணம்)	$
செலுத்த வேண்டிய மொத்தத் தொகை	$
நேரத்துக்கு என்னால் வாடகையைச் செலுத்த முடியவில்லை, ஏனென்றால்...	
எதிர்காலத்தில் என்னால் வாடகையைக் செலுத்தக்கூடியதாக இருக்கும், அத்துடன் நான் செலுத்த வேண்டியிருக்கும் கட்டணங்களுக்கான மேலதிக பணத்தையும் என்னால் செலுத்த முடியும், ஏனெனில்...	
நான் செலுத்தவேண்டிய கடனை நான் செலுத்த வேண்டிய மாதங்களின் எண்ணிக்கை	
வழக்கமான மாத வாடகையை ஒவ்வொரு மாதமும் எனது வாடகை செலுத்த வேண்டிய திகதியில் என்னால் செலுத்த முடியும்.	$
எனது வழக்கமான வாடகைத் தொகையிலும் மேலதிகமாக நான் செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்துவதற்காக ஒவ்வொரு மாதமும் நான் செலுத்தக்கூடிய தொகை	$
மேலதிமான தொகையை நான் செலுத்தக்கூடிய நாள்கள்	
மீளச் செலுத்த வேண்டிய நேரத்தில் என்னால் பணம் செலுத்தமுடியாமல் போகக்கூடிய சாத்தியமான சூழ்நிலைகள் அல்லது பிற செலவுகள் (உதாரணத்துக்கு, வேலை நேரக் குறைப்பு, மருத்துவச் செலவுகள், பாடசாலை ஆரம்பிக்கும் காலச் செலவுகள்)	
அப்படி நடந்தால், எப்படி நான் எனது கட்டணத்தைச் செலுத்தலாம்? அந்த மாதத்தை/மாதங்களைப் பிரதிபலிக்கும் வகையில் திருப்பிச் செலுத்தும் அட்டவணையில் மாற்றம் இருக்க வேண்டுமா?	

இணைப்பு B: ஆதரவு முகமைகள்

வாடகைக்குடியிருப்பாளரின் உரிமைகளுக்கான உதவி

அமைப்பு	வழங்கப்படும் ஆதரவுகள்	தொடர்புத் தகவல்கள்
Federation of Metro Tenants' Association (FMTA)	வாடகைக்குடியிருப்பாளரான உங்களின் சூழ்நிலைகளுக்கு மிகவும் பொருத்தமான ஆதரவைக் கண்டறிய உதவுகிறது. வாடகைக்குடியிருப்பாளரின் பொதுவான உரிமைகள் பற்றியும் வெளியேற்றம் தொடர்பான தெரிவுகள் பற்றியும் வழிகாட்டுதல் வழங்கப்படுகிறது.	Tenant Hotline (குத்தகைக்காரருக்கான இணைப்பு): 416-921-9494 https://www.torontotenants.org/
Community Legal Education Ontario (CLEO)	வெளியேற்றப்படும் வாடகைக்குடியிருப்பாளர்களுக்கான தகவல்களையும் ஆதாரங்களையும் வழங்குகிறது	https://www.cleo.on.ca/en/resources-and-publications/housing-law
Rental Housing Enforcement Unit (வாடகைக்குடியிருப்பு அமுல்படுத்தல் அலகு/RHEU)	குடியிருப்பு வாடகைச் சட்டத்தின் கீழான உங்களின் உரிமைகளை உங்களின் குடியிருப்பு உரிமையாளர் மீறினால் உதவி வழங்குகிறது. உதாரணத்துக்கு, உங்களின் குடியிருப்பு உரிமையாளர் உங்களைத் துன்புறுத்தல், உங்களை சட்டவிரோதமாக வெளியேற்றல், அனுமதியின்றி உங்களின் குடியிருப்புக்கு வரல் அல்லது மேற்கூறியவற்றில் ஏதாவது ஒன்றைச் செய்வதாக அச்சுறுத்தல். மாகாணப் பராமரிப்புத் தரநிலைகளையும் RHEU செயல்படுத்துகிறது, இது உள்ளூர்க் குடியிருப்புத் தரநிலைகள் இல்லாத போதெல்லாம் பொருந்தும்.	தொலைபேசி: 1-888-772-9277 https://www.ontario.ca/page/solve-disagreement-your-landlord-or-tenant
குடியிருப்பு உரிமையாளர் மற்றும் குத்தகைக்காரர் சபை (LTB)	குடியிருப்பு வாடகைச் சட்டத்தின் (RTA) கீழான செயல்முறைகள் மற்றும் நடைமுறைகள் மற்றும் குடியிருப்பு உரிமையாளர்கள் மற்றும் வாடகைக்குடியிருப்பாளர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் பற்றிய தகவல்களை வழங்குகிறது.	தொலைபேசி: 1-888-332-3234 tribunalsontario.ca/ltb

சட்ட உதவி

அமைப்பு	வழங்கப்படும் ஆதரவுகள்	தொடர்புத் தகவல்கள்
Canadian Centre for Housing Rights ((குடியிருப்பு உரிமைகளுக்கான கனேடிய மையம்/ CCHR)	தனியார் சந்தையிலுள்ள வாடகைக் குடியிருப்புக்களில் இருக்கும் வாடகைக்குடியிருப்பாளர்கள், வாடகைக்குடியிருப்பாளர்கள் குழுக்கள் மற்றும்/ அல்லது வாடகைக்குடியிருப்பாளர் சங்கங்களுக்கு சட்ட சேவைகளை வழங்குகிறது. ரொறன்ரோக் குத்தகைதாரர் ஆதரவுத் திட்டத்தையும் (TTSP) CCHR ஆதரிக்கிறது.	தொலைபேசி: 416-944-0087, 1-800-263-1139 (கட்டணமற்றது) https://housingrightscanada.com
Legal Aid Ontario	மையங்கள் மற்றும் வழக்கறிஞர்கள் மூலம் சட்டரீதியான சேவைகளை வழங்குகிறது. தகுதியான வாடகைக்குடியிருப்பாளர்களுக்கு இலவச சட்ட ஆலோசனை வழங்கப்படுகிறது. Legal Aid Ontario legal clinic (சட்ட உதவி ஒன்ராறியோ சட்ட மையம்) இலிருந்து உதவி பெறுவதற்கு உங்களுக்கு இருக்கக்கூடிய அதிகபட்ச வருமானம் என்றொரு தேவைப்பாடு இருக்கக்கூடும். அந்த வருமானத்தின் அளவைவிட அதிகமாக நீங்கள் சம்பாதித்தால், சட்ட உதவிக்காக வேறு முகமைகளுக்கு அவர்கள் உங்களைப் பரிந்துரைக்கக்கூடும்.	தொலைபேசி: 416-979-1446, 1-800-668-8258 (கட்டணமற்ற தொலைபேசி) அல்லது 311ஐ அழைத்து “Legal Aid Ontario legal clinic” எனக் கேளுங்கள். https://www.legalaid.on.ca/legal-clinics

அமைப்பு	வழங்கப்படும் ஆதரவுகள்	தொடர்புத் தகவல்கள்
Tenant Duty Counsel (TDC)	குடியிருப்பு உரிமையாளர் மற்றும் குத்தகைதாரர் சபையிடமிருந்து விசாரணைக்கான அறிவிப்பொன்றைப் பெற்றிருக்கும் வாடகைக்குடியிருப்பாளர்களுக்கு இலவச சட்ட ஆலோசனைகளை வழங்குகிறது. உங்களை **வெளியேற்றல் தொடர்பான விசாரணைக்கான திகதி திட்டமிடப்பட்ட பின்னரே** TDC **ஐத் தொடர்புகொள்ளுங்கள்**. TDC என்பது ஒன்ராறியோவின் குத்தகைதாரர்களுக்கான பரிந்துரைப்பு மையமாகும்.	உங்களின் விசாரணைக்கு முன்பாக அழைப்பைப் பெறுவதற்காக https://tdc.acto.ca/ க்குச் சென்று பதியுங்கள்.
Law Society of Ontario (ஒன்ராறியோவில் சட்ட அமைப்பு)	உங்களின் உரிமைகள் மற்றும் தெரிவுகளைத் தீர்மானிப்பதற்கு உங்களுக்கு உதவும் 30 நிமிடங்கள் வரையிலான இலவச ஆலோசனைக்காக ஒரு வழக்கறிஞரை அல்லது சட்ட உதவியாளரை நீங்கள் கோரக்கூடிய பரிந்துரைப்புச் சேவையை வழங்குகிறது.	தொலைபேசி: 416-947-3300, 1-800-668-7380 (கட்டணமற்றது) www.findlegalhelp.ca

நிதி உதவி

அமைப்பு	வழங்கப்படும் ஆதரவுகள்	தொடர்புத் தகவல்கள்
Toronto Rent Bank	குறுகிய கால நிதிப் பிரச்சினைகள் காரணமாக வெளியேற்றப்படலை எதிர்கொள்ளும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு மானியங்களை வழங்குகிறது. இந்தத் திட்டம் Neighbourhood Information Post மூலம் வழங்கப்படுகிறது, இதற்கு ரொறன்ரோ நகர் நிதியளிக்கிகிறது.	தொலைபேசி: 416-397-RENT (7368) toronto.ca/rentbank
Eviction Prevention in the Community (சமூகத்தில் வெளியேற்றப்படலைத் தடுத்தல்/EPIC)	வெளியேற்றப்படலைத் தடுப்பதற்கான வினைத்திறனான தீர்வுகளை உருவாக்குவதற்காக வாடகைக்குடியிருப்பாளரர்கள் மற்றும் அவர்களது குடியிருப்பு உரிமையாளர்களுடன் இணைந்து செயல்படுகிறது. வெளியேற்றப்படலைத் தடுப்பதற்காக EPIC பணியாளர்கள் தேவைக்கேற்ற சேவைகளை வழங்குகிறார்கள். உங்களின் உள்ளூர் Housing Help Centre (குடியிருப்பு உதவி மையம்) இன் பரிந்துரைப்பு ஊடாக EPIC சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.	Housing Help Centres ஊடாகக் கிடைக்கிறது. உதவிக்காக 311ஐ அழையுங்கள்.
Housing Stabilization Fund (HSF)	Ontario Works (OW), Ontario Disability Support Program (வலுவிழப்புக்கான ஆதரவுத் திட்டம்/ ODSP) அல்லது அவசரகால உதவி பெறும் புலம்பெயர்ந்தவர்களுக்கு நிலுவைத் தொகை, வாடகை வைப்புத்தொகை, இடம்மாறும் செலவுகள் போன்றவற்றுக்கான நிதி உதவி மற்றும் ஏனைய ஆதரவுகளை வழங்குகிறது.	Caseworkers ஊடாகப் பரிந்துரைப்புக்கள் கிடைக்கும்.
குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கான மின்சக்தி உதவித் திட்டம் (LEAP)	குறைந்த வருமானம் கொண்ட சேவைபெறுநர்களுக்கு அவர்களின் கட்டணங்களைச் செலுத்துதல் மற்றும் மின்சாரத்துடன் தொடர்பான செலவுகளுக்கு உதவுகிறது. LEAP என்பது ஒரு மானியத் திட்டமாகும், இது தகுதி அளவுகோல்களை பூர்த்திசெய்யும் தகுதியுள்ள குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கு அவசரகால நிவாரணங்களை வழங்குகிறது.	www.oeb.ca/rates-and-your-bill/help-low-income-consumers/low-income-energy-assistance-program
Ontario Electricity Support Program (ஒன்ராறியோ மின்சக்தி ஆதரவுத் திட்டம்/OESP)	குறைந்த வருமானம் கொண்ட சேவைபெறுநர்களுக்கு அவர்களின் குடியிருப்புக்கான மின்சாரக் கட்டணத்தில் மாதாந்தக் குறைப்பை ஏற்படுத்துவதன் மூலம் உதவுகிறது.	தொலைபேசி: 1-855-831-8151 https://ontarioelectricitysupport.ca/

குடியிருப்புக்கான உதவி

அமைப்பு	வழங்கப்படும் ஆதரவுகள்	தொடர்புத் தகவல்கள்
Housing Help Centres (குடியிருப்புக்கான உதவி மையங்கள்)	குடியிருப்பைக் கண்டுபிடிப்பதற்கும், அதனைத் தக்கவைத்திருப்பதற்குமான உதவி மற்றும் வெளியேற்றப்படலைத் தடுத்தல்.	தொலைபேசி: 416-285-8070 or 311 https://www.toronto.ca/community-people/housing-shelter/homeless-help/housing-help/

மன ஆரோக்கியம் & சமூக சேவைகளின் உதவி

அமைப்பு	வழங்கப்படும் ஆதரவுகள்	தொடர்புத் தகவல்கள்
211 Ontario	ரொறன்ரோ முழுவதும் உள்ள பரந்துபட்ட சமூகங்களுக்கும் மனநல மற்றும் ஏனைய ஆதரவுகளை இலவசமாக வழங்கும் அமைப்புக்களுடன் மக்களை இணைக்கிறது.	தொலைபேசி: 211 https://211central.ca/
Centre for Immigrant and Community Services (குடிவரவாளர்கள் மற்றும் சமூகத்தவருக்கான மையம்/CICS)	பிள்ளைகள் மற்றும் இளையோருக்கான சேவைகள், வேலைவாய்ப்புச் சேவைகள், குடியேற்றச் சேவைகள், சமூகரீதியான உணவுத் திட்டங்கள் மற்றும் பலவற்றை உள்ளடக்கிய பல்வேறு சேவைகளை புலம்பெயர்ந்தோருக்கும் மற்றும் புதியோருக்கும் வழங்குகிறது.	தொலைபேசி: 416-292-7510 https://www.cicscanada.com
The Neighbourhood Group Community Services	வறுமை, வீடற்ற தன்மை, மனநலம், வேலையின்மை, சமூகரீதியான தனிமைப்படுத்தப்படல், போதைப்பொருள் பயன்பாடு, முரண்பாடுகளுக்கான தீர்வு, வன்முறை மற்றும் புதியகுடியிருப்பாளர்களின் குடியேற்றம் போன்ற பிரச்சனைகளுக்குத் தீர்வு காணும் இலவசத் திட்டங்கள் மற்றும் சேவைகளை ரொறன்ரோ முழுவதும் வழங்குகிறது.	தொலைபேசி: 416-925-4363 https://tngcommunityto.org/

குறிப்புகள்: